Australian Government

# National Redress Scheme

# துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிப் பிழைத்த கலாச்சார மொழியியல் ரீதியாக பல்வேறுபட்டவர்களுக்கான (CALD) வளங்கள் மற்றும் ஆதரவுதவி

| குறைதீர்ப்பிற்கான வழி | வளங்கள் |
| --- | --- |
| **விழிப்புணர்வு**<br>*‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ என்றால் என்ன?’*<br>*‘மேலதிக தகவல்களை நான் எங்கே பெறலாம்?’*<br><br>**புரிந்துணர்வு**<br>*‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’என்ன என்பதையும், அது எவருக்கானது என்பதையும் நான் அறிவேன்.’*<br>*‘நான் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராக இருக்கலாம்.’* | • சுவரொட்டி<br>• சிற்றேடு<br>• விளக்கக் காணொலிகள்<br>• ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட தகவல் தாள்’-இற்கான அறிமுகம்<br>• தகவல் விளக்கப் புத்தகம் |
| **விண்ணப்பிக்கத் தீர்மானித்தல்**<br>*‘நான் தகுதியுள்ளவரா என்பதை அறியவும், விண்ணப்பிக்க வேண்டுமா என்று முடிவு செய்யவும் நான் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் பேச விரும்புகிறேன்.’* | • சிற்றேடு<br>• விளக்கக் காணொலிகள்<br>• கிடைக்கும் உதவிகள் குறித்த தகவல் தாள்<br>• குறை தீர்ப்பு தகவல் தாள்-இற்கு விண்ணப்பித்தல்<br>• தகவல் விளக்கப் புத்தகம் |
| **விண்ணப்ப செயல்முறை**<br>*‘எனக்குத் தேவையான தகவல்களும் ஆலோசனைகளும் என்னிடம் உள்ளன. நான் விண்ணப்பிக்கப் போகிறேன். எனக்கு உதவி தேவைப்படும்போது உதவுவதற்கு உள்ள ஆதரவுதவி சேவைகள் பற்றி எனக்குத் தெரியும்.’* | • குறை தீர்ப்பு தகவல் தாள்-இற்கு விண்ணப்பித்தல்<br>• தகவல் விளக்கப் புத்தகம் |
| **விண்ணப்பத்தின் நிலை**<br>*‘எனது குறை தீர்ப்பு விண்ணப்பத்தின் முன்னேற்றம் குறித்த புதுப்பிப்புகள் எனக்குக் கிடைக்கின்றன. எனக்கு உதவி தேவைப்படும்போது உதவுவதற்கு உள்ள ஆதரவுதவி சேவைகள் பற்றியும் மேலும் புதுப்பிப்புகளைப் பெற நான் அழைக்க வேண்டிய இடங்கள் பற்றியும் எனக்குத் தெரியும்.’* | • தகவல் விளக்கப் புத்தகம் |
| **விண்ணப்பத்தின் தீர்வுமுடிவு**<br>*‘நான் குறைதீர்ப்புக்குத் தகுதியுடையவர் என்றும், எனக்கு என்ன கிடைக்கும் என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனக்கு உதவி தேவைப்படும்போது நான் அழைக்க வேண்டிய ஆதரவுதவி, நிதி மற்றும் சட்ட சேவைகள் பற்றி எனக்குத் தெரியும்.’* | |

## உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்

விண்ணப்பங்கள் **30 ஜூன் 2027**-இற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கான தகுதி:

- நீங்கள் 18 வயதை அடைவதற்கு முன்பு நிறுவனம் சார்ந்த பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆட்பட்டிருந்தால், மற்றும்
- துஷ்பிரயோகம் 1 ஜூலை 2018 க்கு முன்பு நிகழ்ந்திருந்தால், மற்றும்
- நீங்கள் 30 ஜூன் 2010 க்கு முன்பு பிறந்திருந்தால், மற்றும்
- நீங்கள் விண்ணப்பிக்கும் போது ஆஸ்திரேலியக் குடிமகனாகவோ நிரந்தர குடியுரிமையுடனோ இருந்தால், சிறுவராய் இருக்கும் போது புலம்பெயர்ந்தோர் விதிவிலக்காவர், அவர்கள்:
  - 1984-இற்கு முன்பு ஐக்கிய இராச்சியம் அல்லது மால்டாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தால்,
  - பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாமல் ஆஸ்திரேலியாவிற்கு வந்திருந்தால், மற்றும்
  - மாநிலத்தின் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்தால்.

## எங்களுடன் தொடர்புகொள்ளல்

நீங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்து திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை **1800 737 377** என்ற இலக்கத்தினை அழைப்பதன் மூலம் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்துடன் தொடர்பு கொள்ளலாம். (அழைப்பு கட்டணங்கள் அறவிடப்படலாம்).

உங்களுக்கு உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால் எங்களை அழைக்கும்போது எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள், எம்மால் அவரை அழைப்பில் இணைக்க முடியும்.

அல்லது உங்கள் மொழியில் கிடைக்கும் உதவிக்காக ‘மொழி பெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை’யை (TIS) **131 450** இல் அழைக்கவும்.

## இலவச ஆதரவுதவி கிடைக்கும்

‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்காக விண்ணப்பிக்க விரும்பும் நபர்களுக்காக இலவச, சுயாதீன ஆதரவதவியை ‘குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவைகள்’ வழங்குகின்றது. மேலும் அவர்களுக்கு உங்கள் விண்ணப்பப் படிவத்தை நிரப்ப உதவவும், உங்கள் சார்பில் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்துடன் பேசவும் முடியும்.

‘குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவைகள்’ பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: **www.nationalredress.gov.au/RSS**

## உங்கள் மொழியில் உள்ள வளங்கள்

உங்கள் மொழியில் உள்ள வளங்களை அணுக இந்த வலைப் பக்கத்திற்குச் செல்லுங்கள்:

**www.nationalredress.gov.au/tamil**

*“குறைதீர்ப்பு” என்பது கடந்த கால அநீதிக்கு பரிகாரம் காண்பதாகும். இந்தத் திட்டம் 2018 க்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் நிறுவன அமைப்புகளில் இடம்பெற்ற சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு பரிகாரம் காண்கிறது.*